**செய்தி வெளியீடு : 128** **நாள்: 01.10.2022**

**மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநரும், ஆரோவில் அறக்கட்டளை தலைவர்**

**திரு.ஆர் .என். ரவி ,அவர்கள் அறிவுறுத்தலின் படி**

**இந்தியா சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் நிறைவடைவதை குறிக்கும் விதமாகவும் (சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா) மற்றும் மகான் ஸ்ரீ அரவிந்தரின் 150-வது பிறப்பு ஆண்டுவிழா ஆகியவற்றின் நினைவாக, பள்ளி (6 முதல் 12-ஆம் வகுப்பு வரை), மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான தேசிய மற்றும் சர்வதேச அளவில் கட்டுரை மற்றும் குறும்படப் போட்டிகளை அறிவித்துள்ளது.**

**போட்டியில் பங்குபெறுவதற்கான இறுதி நாள்**

**30.10.2022- வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.**

ஆரோவில் அறக்கட்டளை, இந்திய சுதந்திரத்தின் 75-வது ஆண்டு விழா (சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா) மற்றும் ஸ்ரீ அரவிந்தரின் 150-வது பிறந்தநாள் ஆகியவற்றை முன்னிட்டு, தேசிய மற்றும் சர்வதேச அளவில் (தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில்)பள்ளி (6 முதல் 12-ஆம் வகுப்பு வரை) கட்டுரை மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான குறும்படப் போட்டிகளை அறிவித்துள்ளது.

1) ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழியில் அமையும் பள்ளி மாணவர்களுக்கான கட்டுரை*அல்லது குறும்படத்தின் தலைப்பு: "ஸ்ரீ அரவிந்தரும் ஆரோவில்லும்: இந்தியாவின் மேன்மைக்கு புத்தொளியூட்டுதல் "

2) ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் கல்லூரி/பல்கலைக்கழக மாணவர்களுக்கான கட்டுரை அல்லது குறும்படத்தின்*தலைப்பு:"ஸ்ரீ அரவிந்தரும் ஆரோவில்லும்: மனித குலத்திற்கு இந்தியாவின் கொடை"

கட்டுரைகள் 10 பக்கங்களுக்கு மிகாமல் (A4 அளவு), ஒரு பக்கத்திற்கு 20வரிகள் (மொத்தம் சுமார் 3000சொற்கள்) மற்றும் PDFகோப்பு வடிவில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.குறும்படத்தின் கால அளவு 5-7 நிமிடங்கள் மற்றும் அவை .mp4, .aviஅல்லது .mpeg கோப்புகளின் வடிவத்தில் இருக்க வேண்டும். விண்ணப்பிப்பவர் குறும்படங்களை யூடியூப் அல்லது பொதுவில் அணுகக்கூடிய பிற ஒளித்தோற்றத் தளங்களில் பதிவேற்றலாம் (காணொளியை புது உள்நுழைவு மூலம் காண்பதாய் இருத்தல் கூடாது) அல்லது கோப்புகளை https://filetransfer.io/அல்லது https://wetransfer.com/வழியாகவும் அனுப்பலாம் மற்றும் கீழே விளக்கப்பட்டுள்ளபடி, சமர்ப்பிப்பு செயல்முறையின் மூலம் தொடர்புடைய இணைப்புகளைப் பகிரவும்.

கட்டுரைகள்/ குறும்படங்கள் 30 அக்டோபர் 2022 அன்று மாலை 6.00 மணிக்குள் (IST) அல்லது அதற்கு முன்பாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். அவை எண்ணிமவடிவில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிகளுக்கு அனுப்பப்படல் வேண்டும். சமர்ப்பிக்கும் மின்னஞ்சலில் கட்டுரைகளுக்காக இணைக்கப்பட்ட PDF ஆவணம் அல்லது பதிவேற்றப்பட்ட/மாற்றப்பட்ட காணொளிக் காட்சிக் கோப்பிற்கானஇணைப்பு இருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு பங்கேற்பாளரின் சமர்ப்பிப்பு மின்னஞ்சல்களிலும் பின்வரும் விவரங்கள் தவறாமல் இருத்தல் வேண்டும்: 1) பெயர், 2) குடியிருப்பு முகவரி, 3) கல்வி நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி, 4) வகுப்பு/தகுதி நிலை/புலம் மற்றும் 5) தொடர்பு கொள்ள வேண்டிய செல்லிடப் பேசிஎண் மற்றும் மின்னஞ்சல் முகவரி.

கோரப்பட்ட விவரங்கள் மற்றும் இணைக்கப்பட்ட கோப்புகள்/இணைப்புகள் ஆகியவற்றைக் கொண்டுள்ள சமர்ப்பிப்புகள் மட்டுமே மதிப்பீடு செய்யப்படும்.

தலைசிறந்த நபர்களைக் கொண்ட இரண்டு குழுக்கள் – தமிழ் - ஆங்கில - கட்டுரைகள் / குறும்படங்களை மதிப்பீடு செய்யும்.

கல்லூரி அளவிலானபோட்டிக்கு, முதல், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே ரூ.1.00 லட்சம்(ரூபாய் ஒரு லட்சம்), ரூ.75,000 (ரூபாய் எழுபத்தைந்தாயிரம்) மற்றும் ரூ. 50,000 (ரூபாய் ஐம்பதாயிரம்) பரிசாக வழங்கப்படும்.

பள்ளி அளவிலானபோட்டிக்கு, முதல், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே ரூ.75,000 (ரூபாய் எழுபத்தைந்தாயிரம்), ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம்) மற்றும் ரூ.25,000 (ரூபாய் இருபத்தைந்தாயிரம்) வழங்கப்படும். ரொக்கப் பரிசுகளும் சான்றிதழ்களும் உரிய நேரத்தில் வழங்கப்படும்.

பள்ளி அல்லது கல்லூரி மாணவரின் கட்டுரை அல்லது குறும்படங்களை(ஆங்கிலம் அல்லது தமிழ் மொழி), எட்டு வகைகளில் சமர்ப்பிப்பதற்கான மின்னஞ்சல் முகவரிகளின் பட்டியல்.

I. தமிழ் வழி:

1) பள்ளி மாணவர்களுக்கான கட்டுரை சமர்ப்பிப்புகள்: essay.schools.tamil@auroville.org.in

2) பள்ளி மாணவர்களுக்கான குறும்பட சமர்ப்பிப்புகள்: film.schools.tamil@auroville.org.in

3) கல்லூரி மாணவர்களுக்கான கட்டுரை சமர்ப்பிப்புகள்: essay.college.tamil@auroville.org.in

4) கல்லூரி மாணவர்களுக்கான குறும்பட சமர்ப்பிப்புகள்: film.college.tamil@auroville.org.in

II. ஆங்கில வழி:

1) பள்ளி மாணவர்களுக்கான கட்டுரை சமர்ப்பிப்புகள்:essay.schools.english@auroville.org.in

2) பள்ளி மாணவர்களுக்கான குறும்பட சமர்ப்பிப்பு: film.schools.english@auroville.org.in

3) கல்லூரி மாணவர்களுக்கான கட்டுரை சமர்ப்பிப்புகள்: essay.college.english@auroville.org.in

4) கல்லூரி மாணவர்களுக்கான குறும்பட சமர்ப்பிப்புகள்: film.college.english@auroville.org.in

ஸ்ரீ அரவிந்தரின் 150-வது பிறந்தநாள் மற்றும் சுதந்திர இந்தியாவின் 75-வது ஆண்டின் நிறைவு ஆகியவற்றைக் கொண்டாடும் இவ்வேளையில், ஸ்ரீ அரவிந்தரின் எண்ணங்கள், வார்த்தைகள் மற்றும் செயல்களை ஆழமாக ஆராய்வதற்கும், அவற்றை ஒருங்கிணைத்து, பிரதிபலிப்பதற்கும், இந்தியா மற்றும் உலகம் முழுவதிலும் உள்ள மாணவர்களை அழைப்பதாக இத்தருணம் அமைந்துள்ளது. அவரது இலட்சியங்கள், கருத்துக்கள், நம்பிக்கைகள் மற்றும் கனவுகளை குறும்படங்கள் மூலமாகவோ அல்லது கட்டுரைகள் மூலமாகவோ இந்த சர்வதேச போட்டியில் பங்கேற்பதன் மூலம் வெளிப்படுத்துங்கள்.

**சிறப்புப் பணி அலுவலர்,**
**ஆரோவில் அறக்கட்டளை, ஆரோவில் ,**
**விழுப்புரம் மாவட்டம் - 605 101, தமிழ்நாடு.**

---